இருப்பதால், அந்தக் கட்டிடங்களைப் பழுதுபார்ப்பதற்கும், புதிய கட்டிடத்தைக் கட்டுவதற்கும் ஏற்பாடு செய்வதோடு, மேலும் அங்கே மேஜை, நாற்காலி போன்றவை இல்லாத சூழ்நிலை இருப்பதால் அவைகளை வாங்கிப் போடுவதற்கும், நிர்வாகத்திற்குச் சொந்தமான அந்த வைப்புத் தொகையை எடுத்து செலவழிக்கும் முறை இருக்கிறது. அன்றைக்கு 1000 மாணவர்கள் படித்த அந்தக் கல்லூரியில் இன்றைக்கு 500-க்கும் குறைவாக படித்து வருகின்ற ஒரு மோசமான நிலைமை இருக்கிறது. ஆகவே, அந்தக் கல்லூரியைக் காப்பாற்ற அதற்கான கட்டிடத்தைக் கட்டுவதற்கும், மேஜை நாற்காலி வாங்கிப் போடுவதற்குமான நல்ல சூழ்நிலையை அரசாங்கம் உருவாக்குமா என்று அமைச்சர் அவர்கள் மூலமாக தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்பமிகு தலைவர் அவர்களே, அதுபற்றி அரசு ஆலோசித்து தக்க நடவடிக்கை எடுக்கும்.

இருபது அம்சத் திட்டம்.

757* (வினா எண். 5285) திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கடந்த மூன்று ஆண்டுகளாக 20 அம்சத் திட்டத்தை அமுலாக்குவதில் தமிழக அரசு எந்தெந்த திட்டங்களை அரசு நிர்ணயித்த குறியிளவை விட அதிகமாக நிறைவேற்றியுள்ளது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: அவை முன் விவர அறிக்கை ** ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருபது அம்சத் திட்டத்தை நாம் வெற்றிகரமாக நமது மாநிலத்தில் செயல்படுத்தி வருகிறோம். மத்திய அரசு நமக்கு அதற்காக விசேஷ நிதி உதவியை அளிக்கிறதா? விசேஷ நிதி உதவி அளிக்கவேண்டும் என வற்புறுத்தப்படுமா? மேலும், இந்தியாவிற்கே ஒரு வழிகாட்டியாக நமது மாநிலத்தில்தான் இந்த 20 அம்சத் திட்டத்தை சிறப்பாக செய்து வருகிறோம். சட்டசபையிலேயே எல்லாக் கட்சிகளும் சேர்ந்து ஏகமனதாக ஒரு தீர்மானம் கொண்டு வந்து பாரத பிரதமர் திரு. ராஜீவ் காந்தியிடம் இந்த மாநிலத்திற்கு ஒரு சிறப்பு அந்தஸ்து கொடுக்கிற அளவில் ஒரு சிறப்பு பரிசு கொடுக்கிற அளவில் ஏற்பாடு செய்தால் மற்ற மாநிலங்களில் உள்ளவர்

** 242 பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1986 மே 13

களும் அந்தத் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்துவார்கள். அதற்கு அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, யாரும் பாராட்டவேண்டும் அல்லது பாராட்டுகளைப் பெறவேண்டும் என்பதற்காக அரசுகள் இந்த நல்வாழ்வுத் திட்டங்களை நிறைவேற்றுவது இல்லை. அரசுகள் அமைந்திருப்பதற்கு அடிப்படையே மக்களுக்கான நல்வாழ்வுத் திட் திட்டங்களை நிறைவேற்றுவதற்குத் தான். ஆகவே, அந்த வகையிலே நாம் ஏற்றுக் கொண்டிருக்கிற இந்த நல்ல திட்டங்களை நம்முடைய உணர்வுபூர்வமாகவும், மிகுந்த வேகத்தோடும் நிறைவேற்றுவதிலே நாம் முனைந்து கொண்டிருக்கிறோம். அப்படி முனைந்து நிறைவேற்றுகிற காரணத்தினாலே முதலிடத்திலே இருந்து கொண்டிருக்கிறோம். ஆகவே, அப்படிப்பட்ட முயற்சிகளுக்கு பாராட்டுகள் வழங்கினாலே போதும். பரிசு என்பதைப் பொறுத்தவரை, குடும்ப நலப் பாதுகாப்புத் திட்டத்திற்கு மத்திய அரசு அப்படி ஒரு பரிசு வைத்து இருக்கிறது. அதிலே நம்முடைய தமிழக அரசு இரண்டரைக் கோடி ரூபாயைப் பரிசாகக் கூடப் பெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, பரிசுக்காகவோ அல்லது பாராட்டுக்கள் வரவேண்டும் என்பதற்காகவோ மாநில அரசு இந்தத் திட்டங்களை நிறைவேற்றவில்லை, மக்களுடைய நல்வாழ்வுத் திட்டங்கள் என்கின்ற அந்த உணர்விலேதான் அதை இதயசுத்தியோடு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அறிவித்த இருபது அம்சத் திட்டத்திற்கும், தற்போதைய பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அறிவித்துள்ள இருபது அம்சத் திட்டத்திற்குமுள்ள வித்தியாசம் என்ன எந்தத் திட்டத்தை அரசு அமல்படுத்துகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே கேட்கப்பட்டிருக்கிற கேள்வி மறைந்த இந்தியப் பிரதமர் அன்னை திருமதி இந்திரா காந்தி அவர்கள் அறிவித்த புதிய இருபது அம்சத் திட்டத்தைப் பற்றியது தான். ஆகவே, அந்தத் திட்டங்களைத்தான் அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இருபது அம்சத் திட்டத்திலே பல்வேறு திட்டங்களிலே தமிழக அரசு இந்தியப் பேரரசு நிர்ணயித்துள்ள குறியினை விட மிஞ்சியிருப்பது பாராட்டுக்குரியது, மகிழ்ச்சிக்குரி

]1986 மே 13

யது. ஆனால், ஒன்றிரண்டு திட்டங்களிலே, குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், செடி நடுதல், ஐ.ஆர்.டி.பி. என்று சொல்லப்படுகின்ற திட்டங்களிலே அந்தக் குறிப்பிட்ட ஆண்டுக்கு நாம் இலக்கை மிஞ்சி விட்டாலும் கூட, வருகின்ற ஆண்டுகளிலே— உதாரணமாக, செடி நடுதல் பல இடங்களிலே மிகப் பெரிய அளவிலே நாம் எடுத்துக் கொள்கிறோம். ஆனால், பின்னாலே அந்தச் செடிகள் உயிரோடு இருக்கின்றனவா, அது வளர்வதற்கு என்ன நடவடிக்கை எடுக்கிறோம் என்பதைப் பற்றியும், வறுமைக் கோட்டின் அருகிலே உறவாடி இருக்கிற மக்களுக்கெனக் கொண்டு வருகின்ற திட்டங்களிலே அந்தத் திட்டங்கள், அந்தப் பண உதவிகள் எல்லாம் குறிப்பிட்ட அந்த இலக்கிலே இருக்கிற மக்களுக்குத் தான் போய்ச் சேருகிறதா, அந்தப் பயனைப் பெற்றபின், வருகின்ற காலங்களிலே தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வதற்கு துணையாக இருக்கின்றனவா என்பதற்கு 'மானிட்டரிங் சிஸ்டம்' ஏதாவது வைத்திருக்கிறோமா, சரி பார்ப்பதற்கு? அந்த வகையில் நாம் எய்தியுள்ள இலக்குகள் என்னென்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பொதுவாக திட்டக் குழுவின் தொடர்பாக இந்திய அரசு அறிவிக்கின்ற அந்தத் திட்டங்களை மாநில அரசுகள் எப்படி நிறைவேற்றுகின்றன என்கிற பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற, அதைக் கண்காணித்துக் கொண்டிருக்கிற அந்தத் திட்டத்துறையின் சார்பில் இந்தப் பதில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவேதான் மொத்தமாக எந்த எந்தத் துறையிலே எந்த எந்தத் திட்டங்களிலே நாம் மிஞ்சி இருக்கிறோம், எந்த அளவுக்கு நாம் முன்னேறி இருக்கிறோம் என்கிற பொதுவான பதில்கள் இங்கே தரப்பட்டு இருக்கின்றன. இந்த இருபது அம்சத் திட்டத்தினுடைய ஒவ்வொரு திட்டமும் ஒவ்வொரு துறையைச் சார்ந்த திட்டங்கள். ஆகவே குறிப்பாக, எந்தெந்தத் திட்டங்களைப் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அந்த தனித் திட்டங்களைப் பற்றி நீங்கள் கேள்வி கேட்டால் அதற்குத் தொடர்பான துறைகள் பதில் அளிக்க இயலும். ஆனால் இங்கே நீங்கள் இந்த மரம் நடுகின்ற அந்தத் திட்டத்தைப்பற்றிக் கேட்டிருக்கிறீர்கள். அது, வனத் துறைக்கு நான் பொறுப்பாக இருக்கின்ற காரணத்தினால் பொதுவாக அந்தப் பதிலை மாத்திரம் சொல்லிவிடுகிறேன். அதையும் நான் விரிவாகச் சொல்ல முடியாது. அந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் ஒரு குறியீட்டு இலக்கை அடைய முடியாமல் போவதற்கு உள்ள காரணம், நாம் இந்தக் காரியத்தை நிறைவேற்றுவதிலே ஏற்படுகின்ற சுணக்கங்கள் இல்லை. ஒரு குறிப்பிட்ட காலத்திலேதான் மரம் நட முடியும். காரணம் எல்லாயிடங்களிலும் பல்லாயிரக்கணக்கான இலட்சக்கணக்கான செடிகளை வைத்து அதற்குத் தண்ணீர்

1986 மே 13

ஊற்றுவது என்பது முடியாது. ஆகவே, மழைக் காலங்களைப் பார்த்து, பருவ காலத்தைப் பார்த்துத்தான் அந்த மரங்களை நடுகிறோம், செடிகளை நடுகிறோம். ஆகவே, எதிர்பார்த்த ஒரு பருவகாலத்திலே, செடிகளை நடுவதற்காக எல்லாவற்றையும் தயாரித்து வைத்துக்கொண்டு, எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்ற நேரத்தில், மழை பொய்த்துவிட்டால் நாம் செடிகளை நட முடியாது. அப்படி மழை வருகிறதே என்று செடிகளை நட்டதற்குப் பிறகு அந்தப் பருவமழை எந்தக் காரணத்தினாலாவது குறைந்து அல்லது தவறிவிட்டால் நட்ட செடிகள் பட்டுப் போய்விடுகின்றன. ஆகவே, செடி நடுகின்ற அந்தத் திட்டத்தில் நாம் இலக்குகளை நிர்ணயித்தாலும் அந்த இலக்குகளை அடைய முடியாத ஒரு சூழ்நிலையிலே இருந்து கொண்டிருக்கிறோம். அதை, பிறகு மழை பெய்கின்ற காலத்திலே நிறைவேற்றிவிடுகிறோம். ஆகவே, அந்தத் திட்டத்திற்கு ஒரு குறிப்பிட்ட காலத்தை அவர்கள் வைக்கிறார்கள், அந்த ஆண்டு என்று. அதற்குள்ளே அந்த மரம் அல்லது செடியை நடுகின்ற அந்தத் திட்டத்தில் இந்தக் குறைபாடுகள் தோன்றுகிறதே தவிர அதிலே நாம் முயற்சி இல்லாமல் இருக்கிறோம் என்று பொருள் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. பி. சித்தன் : தலைவரவர்களே, திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களால் கொண்டுவரப்பட்ட இருபது அம்சத் திட்டத்தில், தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கு கொடுக்க வேண்டுமென்ற ஒரு அம்சம் இருந்தது. ஆனால் இப்பொழுது நம்முடைய பிரதமர் இராஜிவ் காந்தி அவர்களால் கொண்டுவரப்பட்ட இருபது அம்சத் திட்டத்தில் அது இல்லை. தொழிலாளர்கள் நிர்வாகத்தில் பங்கு ஏற்க வேண்டுமென்ற கொள்கையை இந்த அரசு வலியுறுத்துமா? இருபது அம்ச திட்டத்தில் அது சேர்க்கப்படவேண்டுமென்று சொல்லியும் அதை கைவிட்டது தவறு என்று தெரிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தொழிலாளர்களுக்குத் தொழில் நிர்வாகத்திலே பங்கு அளிக்க வேண்டுமென்ற கொள்கையைப் பொறுத்தவரையில் இந்த அரசு ஏற்றுக்கொண்டு இருக்கிறது. ஏற்றுக்கொண்டிருக்கின்ற புதிய இருபது அம்சத் திட்டத்திலே அதை நிறைவேற்றிக்கொண்டும் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற, இப்பொழுது இருக்கின்ற அந்தத் திட்டத்திலே சேர்க்கப்படவில்லை என்கின்ற செய்தியைக் குறித்து தனியாக உறுப்பினரவர்கள் கேள்வி கேட்டால். அதைப் பற்றிய விவரங்களை அறிந்து அரசினுடைய நிலைமைகளைத் தெரிவிக்கமுடியும்.